புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

விரோதி௵ (1889)
ஆவணி௴ உஉ௳
ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரிக் கிரயம். | | |
|---|---|---|
| (முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.) | | |
| யாழ்ப்பாணப்பட்டினம்: | ௵ க்கு | ரூ. உ-௨௫. |
| வெளியூர், இந்தியா: | " | ரூ. ௩-௭௫ |
| தொடுவாய்ப்பகுதி: | " | ரூ. ௩-௭௫. |
| தனிப்பிரதி | சதம் | -௦௫. |

| விளம்பர விகிதம். | | ரூ. ச. |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ௭-௫0. |
| " | அரைக்கலம் | ௪-00. |
| " | கால்கலம் | உ-௫0. |
| " | ஒரு அங்குலம் | -௫0. |
| அடுத்தமுறைகட்கு டை விகிதங்களில் அரைவாசி. | | |

புத்தகம் — ௩௧ } யாழ்ப்பாணம்:—ரௌத்திரி௵ வைகாசி௴ உ௧௨; ௧௯௨0-ம்௵ ஜூன்௴ ௩௨. } இலக்கம்—௪௪.


௨
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனமூன்று
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

### சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது [illegible] லேகியத்தை [illegible]

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீராமுள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அயகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு நிருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரையிறாத்தலுக்கு ரூபா க0. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
1 இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

## ஜவுளிவிளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன திறுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சுங்கடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பஞ்சகச்ச சேலை வகையரா சகலதினுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக்காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தி யில்லாத சரக்குகளை திரும்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடரும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரேயிட் செற்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென்ஆபிரிக்கா மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணம்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். [illegible] கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய நேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்
மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
2 மதுரை. (இந்தியா).

சித்திரப் படங்களுடன் கூடிய

### மானிட ஜீவிய சிந்தாமணி

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள அநேக அரிய பெரிய சாஸ்திரங்களையும் நமது பூர்வீக கிரந்தங்களையும் ஆராய்ச்சிசெய்து எழுதப்பெற்றுள்ளது. இதில் தேகத்திலுள்ள எலும்பு, சதை, நாடி, நரம்பு முதலியவைகளைப்பற்றியும், தேகத்திலுள்ள குரல், இரைப்பை, சுவாசப்பை, சிறு குடல், பெருங் குடல் மூளை முதலிய சரீர அமைப்பைச் சித்திரப்படங்களுடன் எடுத்துக்காட்டியும், தேகத்திலுள்ள ஒவ்வொருஉறுப்புகளும் செய்யும் வேலை முறைப்பாடும், அப்படிச் செய்யத் தவறின் அதற்குக் காரணமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒவ்வொரு ரோகங்களும் எந்தெந்தஸ்தானங்களிலிருந்து எவ்வெவ்விதமாய் உண்டாகின்றன வென்பதையும், அந்நோய்களுக்குப் பரிகாரமான இந்து, யூனானி, இங்கிலீஷ் முதலிய ஔஷதபாகங்களும், மருத்துவ சாஸ்திரம், சுகாதாரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், ஆண் பெண் சிசுஉற்பத்தி விபரம், ஆண் மலடு, பெண் மலடு முதலிய விபரங்களும், பாம்பு, தேள், நட்டுவக்காலி, வண்டுகடி முதலிய விஷகடிகளும் அவற்றிற்கான ஔஷத விபரங்களும், இன்னும் இவ்விடத்திற் சொல்ல முடியாத அநேக இரகஸ்யமான விஷயங்களும் கூடியது. இப்புத்தகம் கைக்கொண்ட ஸ்திரீ புருஷர்கள் வைத்தியரைத் தேடவேண்டியதில்லை, இதன் விலை ரூபா 2; பெதர்வெயிட் பேப்பர் பதிப்பு கலிக்கோவைண்டு விலை ரூபா 3. தபால்சார்ஜ் அணா 3. தொடுவாய்ப் பகுதிகளுக்கு தபாற்செலவு அணா 6.

பிளேக், கலரா, மலேரியா முதலிய கொள்ளை நோய்களின் உற்பத்திவிபரங்களும் அவற்றிற்கான பரிகாரங்களும் விலை அணா 6.

F. M. S. மலாய்நாட்டி லுள்ளவர்கள் முற்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர், எஸ். சந்திரசேகர்,
கும்பகோணம்
3 இந்தியா.

## ஜவுளி விளம்பரம்.

சுதேச ஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?

### மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்

ஜவுளி கம்பெனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலீஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா போரியா சுன்னடிச்சேலைகள் வகையராக்களும், சித்தாடை ரவிக்கைத்தினிசுகளும், காசி, பம்பாய், கல்கத்தா, பூனா, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கும், சொந்தப் பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் நேரில் வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி. பி. போஸ்ற் மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

தவிரவும், எங்கள் கம்பெனியில் பட்டுநாணயத்திற்கும், ஜரிகைக்கும் உத்தரவாதமாயிருப்பதால், பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள். ஒருமுறை உண்மையைச் சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்துச் சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்றும் வி. பி. சட்டமில்லாத F. M. S. என்னும் பெடரேற். மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிகளுக்கு ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல ஆடர் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்
எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்.,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைகோபுரவாசல்,
மதுரை.

M. R. V. NAIDU & Sons,
High Class Cloth Bazaar,
4 West Tower, Madura.

## கவனியுங்கள்.

[illegible]

### பேர்பெற்ற கெட்டிச்சாய, நூல்கம்பேனி எது?

### மதுரை
### மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியில் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலைகாரர்களால் அலிஜரைன் என்ற பீபாசாயத்தில் உற்பத்தியாகிறகாட்டுச்சிகப்பு, கெட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24 ம் நம்பர் வரை. 1-ம் தரம் 2-ம் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்ந்து 10 இறாத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பெண்னிகறுப்பு மாதிரி கெட்டி கறுப்பு சாயத்தில் 10-ம் நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 இறாத்தல் கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதரில்லாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலுகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn, Merchants,
Singara Topu Street,
5 Madura, S. INDIA.

## ஔஷதவிளம்பரம்.

மகான்களே!

அடியிற் குறித்திருக்கும் நோய்களுக்கென்றே முறையாய் முடித்த ஔஷதங்கள் வேண்டியவர்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதி தபால் மார்க்கமாய் செலவுகட்டி அழைப்பித்து நோயில்லா வாழ்வைப்பெறும்படி வேண்டுகின்றேன்.

அவையாவன;—(1) நீரிழிவு, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்ச்சிறுப்பு, என்னும் பிரமியரோகங்களுக்கும், மேகப்பகுதிகளுக்கும் (2) குன்மநோய்களுக்கும், (3) கோழை, கசம், இருமல முதலியவைகளுக்கும, (4) வாதப்பகுதிகளுக்கும், (5) தொய்வு, ஈழை, மந்தாரகாசம் முதலியவைகளுக்கும், (6) கபாலக்குத்து, கண்குத்து முதலியவைகளுக்கும், (7) சூதகவாய்வுத் தொந்தங்களுக்கும், (8) உஷ்ணநோய்களுக்கும், (9) கட்டிபுண்கள், (10) பாண்டுப்பகுப்புகள், (11) பித்தரோகங்கள், (12) தேமல் சிறுவர்களுக்குமாகியவைகளே.

நோயில்லா வாழ்வைக்கூடிய சீக்கிரத்தில் தரக்கூடிய தருகதஔஷதங்கள் தயாராயிருக்கின்றன.

அவையாவன:—(1) சூதசெந்தூரம், (2) ஜயகுலாந்தகசெந்தூரம், (3) ஆயகாந்தசெந்தூரம், (4) மிருத்துசஞ்சீவிமாத்திரை, (5) கஸ்தூரிமிருத்தியாதி, (6) கோரோசனைமிருத்தியாதி, (7) சந்திரோதயமாத்திரை, (8) மேகசஞ்சீவிகுழம்பு, (9) தாதுபுஷ்டிலேகியம், (10) மிருத்துசஞ்சீவி எண்ணெய், (11) நயனசந்தனாதி, (12) கபாலசந்தனாதி, (13) சர்வரோகமேகஎரணடத்தயிலம், (14) மெழுகெண்ணெய், (15) தானங்காயெண்ணெய், (16) புனிளண்ணெய்வகைகள், (17) மிருத்துசஞ்சீவிததயிலம்,——மருந்துகளுக்கு வேண்டிய சரக்குகளும், வீ, பீ, மூலமாயனுப்பி வைக்கத்தயாராயிருக்கின்றன.

சி. ஆறுமுகம்பிள்ளை,
திருஞானபண்டிதருகதாசவைத்தியசாலை,
6 சின்னக்கடைத்தெரு திருக்கோணமலை.

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவரவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித் தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு. காசலிங்கம்பிள்ளை
பறங்கித் தெரு,
7 யாழ்ப்பாணம்.

## அநுவாதம்.

### சந்தியாவந்தனம்.

சந்தியாவந்தனம் என்பது-செவ்வையாகத் தியானித்து வழிபடுதல் என்னும் பொருளுள்ளது.

சம்-செவ்வே. தியா-தியானித்தல். வந்தனம்-வழிபாடு.

இச் சந்தியாவந்தனம் சைவர் வைணவர் ஸ்மார்த்தர் மாத்துவர் என்னும் நால்வர்க்கும் பொதுநோக்கில் ஒன்று போலிருப்பினும் சிறப்புவகையில் வெவ்வேறாயிருக்கும். அவ்வவர் முத்தி நிலை வெவ்வேறுபடுதலே அதற்குக் காரணமாம்.

சைவசந்தியாவந்தனம் சிவாகமப்படி சிவதீக்ஷைபெற்றோரால் அநுட்டிக்கப்படுவது. அதன் கருத்தென்னெனில், ஆசிரியனால் தனக்குச் சொல்லப்பட்ட சிவத்துவத்தை அநுபூதியிற் கொண்டு வருதலாம். இது முத்தியடைதற்கு உபாயமாயிருக்கும். அது என்னமெனில், ஒருவன் தன்னை எப்பொழுதுஞ் சிவனாகவே பாவித்து வருகிறான். உண்மையில் அவன் சிவனன்று; ஆன்மாவாம். ஆன்மா சைதன்னியப்பொருள். எங்கும் வியாபகமானது. ஆயினும் ஆணவமல சம்பந்தத்தால் அறியாமையெய்தி அம்மலத்தின் குணமே தன் குணமாகக்கொண்டு ஒன்றுமறியாதிருந்தது. பின் அம்மலமேதுவாக மாயை கன்மங்களையும் அடையலாயிற்று. மாயாகாரியமான சூக்குமசரீரத்தை யடைந்தபொழுது சீவன் எனப்படுகின்றது. ஆதலால் அச்சீவநிலை உபாதியேயன்றி உண்மையன்று. அவ்வுபாதி நீங்கவேண்டின் உண்மை நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆன்மா மலச்சேர்க்கையோடு இருக்கிறவரையில் உண்மைநிலை கைவரமாட்டாது. அதனால் மலம் ஒழியவேண்டியது அவசியமாகிறது.

மல ஒழிவுமாத்திரமன்று, அம்மலம் மீளவும் பந்தியாமலு மிருக்கவேண்டும். மலம் தானாக நீங்காது. ஆன்மா பந்தமுற்றிருப்பதால் அதுவும் மலத்தை நீக்கிக்கொள்ள மாட்டாது. முதல்வன் அநாதியாகவே பந்தமடையாதவன். மலம் அவனைப் பந்திக்கமாட்டாது. அவனுடைய சந்நிதியின் முன்னே மலசத்தி முனைந்து நில்லாது. ஆதலால் அவ்வளவிலாற்றலுடைய அவனே அம்மலத்தை நீக்கிக் காக்க வல்லவனாவன். அவனுடைய சத்தியே மலத்தையொழிக்க வல்லது. அவனுக்கு இரண்டு சத்திகளுள்ளன. ஒன்று கிரியாசத்தி. மற்றொன்று ஞானசத்தி. கிரியாசத்தி மலத்தைப்போக்கும். ஞானசத்தி சிவத்தை யளிக்கும். அதாவது சிவத்துவத்தையுண்டாக்கும் அந்த இரண்டு சத்திகளையும் சந்தியாவர்தன கிரியையினாலே நாம் பாவித்து அடைகின்றோம். மலத்தை வெல்லும் சிவத்தின் சத்தி நம்மிடத்தே தங்கினால் நாம் சிவ வடிவமாவோம். சிவத்துவமடைந்த நம்மை மலம் பந்திக்கமாட்டாது. இதுவே சந்தியாவர்தனத்தின் தாற்பரியமாம்.

ஆசாரியர் சிவதீக்ஷாகாலத்திலே மலசத்தியைக் கெடுத்துச் சிவசத்தியை நம்மிற் பதிக்கின்றார். அவ்வாறு பதிந்தசத்தியை மேலும்மேலும் வளர்த்துப் பரிபூரணமாக்கிக் கொள்வதே சந்தியாவர்தனக் கிரியையாம்.

சந்தியாவர்தனத்திலே சலசுத்தி யென்பது முதலாங் கிரியை. சலசத்தியாவது சலத்திலே சிவத்தின் கிரியாசத்தியைப் பதித்தலாம். இரண்டாங்கிரியை அஸ்திர சந்தியோபாசனம். அஸ்திர சந்தியோபாசனமாவது சூரிய மண்டலத்திலே சர்வகர்ம சாக்ஷியாய் விளங்கும் சதாசிவ மூர்த்தியை வழிபட்டு அவருடைய அருளினாலே சர்வத்தத்துவங்கள் புவனங்களில் நிறைந்திருக்கும் பாவ புண்ணிய கர்மங்களை நீக்கிக் கொள்ளுதலாம். அதனால் ஆன்மாவைப் பந்தித்த கன்மமலம் நீங்கும். மூன்றாங் கிரியை ஆசமனம். இது ஆன்மாவைப்பந்தித்த மாயாமலத்தை யொழித்தல். மாயை கன்மத்துக்குத் தாரகமாய் தவ்வக் கன்மங்களுக்கு ஏற்பத் தநு கரண புவன போகங்களாய் விரிந்திருக்கும். அத் தநு கரண புவன போகங்கள் சுத்தமாயையின் காரியமாகிய ஆன்ம தத்துவங்களினும் விளைவுற்றிருக்கும். ஆன்மா கன்மாநுசாரமாக அத் தநு கரண புவனங்களையடைந்து அக்க போகங்களை நுகரும். இங்கு அப் போக நுகர்ச்சிக்கு ஏதுவாகிய கன்மம் அஸ்திர சந்தியோபாசனத்தால் ஒழியவே அதற்குப் பற்றுக்கொடுத்து நின்ற மாயையும் ஒழியுமாதலால் ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் மூவகை முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்திசெய்து ஒழித்தலே ஆசமனக் கிரியையாகின்றது. கிரியாசத்தி விருத்தியினாலே கன்ம மாயைகள் ஒழியவேண்டுதலின், அக்கிரியாசத்தி வடிவாய் விளங்கும் தீர்த்தம் அதற்கு உபகரணமாகின்றது.

இதற்கு உபகரணமாகும் பொருட்டே கிரியாசத்தியைச் சலத்திற் பதிட்டை செய்யப்பட்டதென்பதும் நினைவிலிருக்கவேண்டும்.

இனி, கன்மமும் மாயையும் ஒழிந்தபின்னர் ஆன்மாவைவிட்டு ஒழியவேண்டியது ஆணவமலம். அவ்வாணவமலம் பாசசத்தியால் ஒழியத்தக்கது. அதனால் அப்பாசத்தியை விபூதியிலே பதிட்டை செய்து அவ்விபூதியைப் பாசத்தி வடிவமாகப் பாவித்து அணிந்துகொள்ளின், அப்பாவனை விசேடத்தால் ஆன்மாவிடத்துப் பாசத்தி விளக்கமுற்று ஆணவமல இருளையகற்றுதல் செய்யும். அதனால் ஆணவமலம் நீங்கும். ஆன்மா இம்மும்மலமும் நீங்கி முத்தனாவன்; இங்கு கிரியாசத்தி வடிவாகின்ற ஆதிசத்தி நீக்கியது கன்மமாயைகளையென்றும் ஞானமே வடிவாயுள்ள பாசத்தி நீக்கியது ஆணவமலத்தையென்றும் அறியத்தக்கது. இப்பாவனையை எப்பொழுதும் பயின்றவரின் அச்சத்திகள் கிரமக்கிரமமாக மேற்பட்டு உண்மையாகவே மலநீக்கஞ் செய்யுமென்பதில் ஐயமில்லை.

அதன்பின்பு சகளீகரணஞ் செய்யப்படும். சகளம்-வடிவம்; கரணம்-செய்தல், மலவடிவு நீங்கிய உயிருக்குச் சிவவடிவு உண்டாக்கல் சகளீகரணமாம். அச்சகளீகரணம் பலவகைப்படும், அவை நினைதற்கு ஏற்பத் தான்பெற்ற வடிவு எதுவோ அதனைப்பாவிக்கும் வேறுபாடுடையது. சமயதீக்ஷிதர் உருத்திரவடிவம் பெறுவர். விசேடதீக்ஷிதர் சதாசிவவடிவம் பெறுவர். லோகதர்மிணிநிருவாணதீக்ஷிதர் மகா சதாசிவவடிவம் பெறுவர். சிவதர்மிணி நிருவாண தீக்ஷிதர் சுத்தமாய் விளங்கும் சச்சிதானந்த சிவ வடிவம் பெறுவர்.

இந் நிலைகளுக்கு ஏற்பவே சகளீகரணமுஞ் செய்யப்படும்.

முதல்வன் உயிர்கள் பொருட்டுச் சிவசத்தி வாயிலாக எடுக்கும் சரீரங்கள் மந்திர சரீரங்களேயாதலால், அவ்வடிவு மந்திரங்கொண்டு பாவிக்கப்படுகின்றன.

உருத்திர வடிவு பெற்ற சமய தீக்ஷிதர் அங்க மந்திரங்களால் நியாசஞ் செய்யவேண்டும். அவ்வம் மந்திரப் பொருளாயுள்ள சிவபேத வடிவங்களைத் தாம் பதித்தலே அவ் வேறுபாட்டுக்குக் காரணமாம்.

இப்படி மந்திரநியாசஞ் செய்து பயின்று வருதலினாலே அவ்வடிவு ஆன்மாவிற்பதிந்து ஆன்மா சிவசொரூபியாவன்.

அதன்பின்பு ஆன்மாவைச் சுத்தமாகிய சிவத்தோடு சேர்த்தல் பிராணாயாம மெனப்படும். பிராண ஆயாமம்-பிராணனைத் தடுத்தல். இடைகலை பிங்கலை வழி யியங்கும் பிராணவாயுவைத் தடுத்துச் சுழுமுனையில் நிறுத்தவே கருவிகரணங்கள் தொழிற்படா தொழியும். மனம் ஒடுங்கும். ஆன்மா அவற்றின் சேர்க்கையை விட்டு அப்பாற் சென்று சிவத்தையடையும். சிவம் ஆறு தாரங்களையுங்கடந்து அப்பாலுள்ள தாகலின், ஆறு தாரங்கடோறும் கருவிகளோடு கூடிச் சீவிக்குமான்மா, அவற்றினீங்கி அதீதமாயுள்ள சிவத்தை யடைதல் அப்பிராணாயாமத்தின் பயனாம். இதினும் மந்திரவேறுபாடு பாவனை வேறுபாடு முன் சொன்னபடி கொள்ளப்படும்.

அதன்பின்பு செய்யப்படுவது சந்தியாத்தியானம், காலை மத்தியம் மாலை இரவு என்னும் வேறுபாடுகளுக்கு ஏற்பச் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம்என்னுங் கிருத்தியங்களைச் செய்துநிற்கும் பிராமி முதலிய சிவசத்திபேதங்களைத் தியானித்து அச்சத்தியின் பூரணப்பிரகாசத்துள் ஒடுங்கி அவ்வண்ணமாதல் சந்தியாத்தியான அபிப்பிராயமாம்.

அதன்பின்பு காலந்தோறும் ஏற்படும் தாலகுக்கும வினைகளை யொழித்தல் மார்ச்சன அகமர்ஷணங்களாம்.

அப்பால் ஆதித்த மண்டல மத்தியில் விளங்கும் சிவபேத வடிவினை அவரவர் தியானிக்கும் வடிவாக வழிபட்டு நீரினாலே தருப்பணஞ் செய்தல் சந்தியாவந்தனமாம். தேவர், முனிவர், மனிதர், பூதங்கள், பிதுர்க்கள் என்னும் ஐவகைத் தருப்பணவாயிலாக வழிபடப்படும். தருப்பணம்-உவப்பித்தல். வழிபட்டு உவப்பித்தலே இவ்வந்தனத்தின் நோக்கமாம்.

இவ்வழிபாடு புண்ணியமாகி அப்புண்ணியத்தினாலே அருள் மேலிட்டு அதனால் முத்தி சித்திக்கும்.

இவ்வாறு மலநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய பிரயோசனம் இச்சந்தியாவந்தன கிரியையினாலே வாய்க்கின்றது.

மலச்சார்பினாலே தன்னைச் சீவனென்றெண்ணிச் சனனமரணப்பட்டு இன்பதுன்பநுகர்ந்து துயருறும் ஆன்மா, காலந்தோறும் அநுதினமும மலநீக்கம் பெற்றதாகவும் சிவத்துவமடைந்ததாகவும் சிவமாகவும் பாவித்துவரின் அப்பயிற்சிவசத்தினாலே சிவனென்னு முணர்வினீக்கிச் சிவமென்னும் உணர்வு தலைப்பட்டு அவ்வுணர்வே மறுஉமக்கும் வித்தாய் முத்திக்கு ஏதுவாமென்றல் சந்தியாவந்தனத்தின் அந்தரங்க அபிப்பிராயமாம்.

நம்மவரில் அநேகர் அருமையாகிய மனிதப்பிறப்பை யெடுத்தும் இச் சந்தியாவந்தன வாயிலாகச் சிவவடிவெய்தி முத்தியடைய விரும்பாமல், உலகமோகங்களுள் மூழ்கி எப்பொழுதும் சீவபாவனையே செய்து மோசம்போகின்றார்களே! இஃது எவ்வளவு அறிவின்மை!!

## அறிவித்தல்.

இத்தாற் சகலருமறியவேண்டியது: தற்காலம் வதுளை தெனிவத்தைதோட்டத்திலிருக்கும், யாழ்ப்பாணம் அராலி கிழக்கு சங்கரப்பிள்ளை கந்தசாமியும், பெண் தங்கமுத்துமாகிய நாங்கள், வதுளை பிரசித்த நொத்தாரிஸ் அல்விறட் போலியர் பர்தலமியூஸ் அவர்கள் முன்பாக 248ம் இலக்கத்தில் 1914-ம் ஆ புரட்டாதி மீ 19வ முடிந்த உறுதியின்படி யாழ்ப்பாணம் அராலி கிழக்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்குக் கொடுத்த அற்றாணித்தத்துவத்தை அழித்துவிட்டோம்.

இதன்பின் அவர் மேற்சொல்லிய உறுதியைக் கொண்டு செய்கிற எந்தக் காரியத்துக்கும் நாங்கள் பாத்தியப்படமாட்டோம்.

இங்ஙனம்,
தெனிவத்தைதோட்டம் ஆஸ்பத்திரி — ச. கந்தசாமி
ச. தங்கமுத்து.
வதுளை, 1020-ம்-ஆ சித்திரைமீ 15உ. 16

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் சுன்னாகம், நாகநாதபிள்ளை பொன்னம்பலபிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியனவாகிய நகைகளின் விபரம்.

இல. 32, 22-1-19, உரும்பராய், சுப்பர் வைத்திலிங்கம், பூரான்சரடு 1 பாதசரம் சோ. 1 ரூபா 80.

இல. 34, 23-1-19, மல்லாகம், கதிரவேலு வல்லிபுரம், தட்டைக்காப்பு சோடி 1 ரூபா 80,

விற்பனவு:—வைகாசிமீ 23உ (1920-ம் ஆ ஜூன் மீ 5உ) சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் டிை சுன்னாகம் சந்தைக்கிட்டவிருக்கும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ச. ஊசராயபிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்திரர்,
உடுவில்.

63

## விளம்பரம்.

### பேசல்மிசன் ஓடுகள்.

உலகப்பிரசித்தியான இவ் ஓடுகள் புதிதாய் அமைப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் குணநிசயங்களை நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்களால் மற்றைய ஓடுகளிலும் திறமானவையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரையோடுகள், காற்றோடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போது இருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
Tile Works.

8

## கேசரஞ்சித தைலம்.




இத்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது" என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித் தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல். டீ. அவர்களும்,

"இத்தைலம் நறுமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது" என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம். டீ. அவர்களும்,

"தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது" என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டீ. அவர்களும்,

"இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது" என்று டக்தர் எஜ் என். கோஷ் எம். டீ. அவர்களும்,

"இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை" என்று டக்தர் யூ. மித்திரா எம். டீ. எம். ஆர். ஏ. எஸ். எல். பி. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

### கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1-க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14.

### சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் 'தொனிக்' ஆயுள்வேத ஔஷதங்களுள் மிகச்சிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்ந்திருக்கின்றது. இது நெருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், நாட்பட்ட கழிச்சல் ரோகத்தையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், நீரிழிவு, சோர்வாதம், குன்மம், வலி, க்ஷயரோகம்முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன் விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய 'கற்லக்கு'கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவா மிராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

01

## இதைக் கவனியுங்கள்.

### உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. **கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.**
இது கெர்ப்ப ஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பம் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

2. **தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.**
இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்தபின்பே இதன் குணம் வெளியாகும்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ.

3. **பிரமேக வியாதிக்குச் சத்துச்செந்தூரம்.**
எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. **எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.**
சரீரத்தின் எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகண்டபலம். ஐந்துதினிஷத்திற் குணமாகும்.
கச மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

5. **மேகசஞ்சீவிச் சூரணம்.**
மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரைவாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

6. **புளிப்பு மாதுளம்பழ லேகியம்.**
அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம்.
கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

7. **இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்**
எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.
உஉ நாள் மருந்து ரூ உ.

8. **மூலிகை ரத்தினத் தைலம்.**
அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் குளுகுளுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. **பரிமள பற்பொடி.**
பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.
டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

10. **படர்மேக சஞ்சாரி வெண்ணெய்.**
மேகரோகரால் தேகத்திலுண்டாம் எவ்வித படர்தாமரைகளையும் கூடிசேவசில் குணமாக்கும்.
டப்பி க-க்கு அணா ச. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

**தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!**

**உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.**

(அ) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வகைக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கஷ்டம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்ற சண்முககாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ங. கல்யாணம் சொந்தமா, ச. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னா பின்னா, சா. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனா, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு நிலம் கிட்டுமா, கo. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. வியாபாரம் ஜெயமாகுமா, கஉ. வினைத்தகாரியம் முடியுமா.
தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ ௫.
பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கிடாட்லாக்" இனமாக அனுப்புவோம.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.
K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்.
மேலைச் சித்திரவீதி.
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும். 11

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors in the Saiva Prakasa Press, Jaffna.